நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை,' திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 3 ம் நாள் திங்கள்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.784/2026
CNR.No.TNTS02-002215-2026
IN
குற்ற.எண்.84/2025

செல்வக்குமார்,
த.பெ.அய்யங்கண்ணு ...மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர் அவர்கள்,
ஆழ்வார்குறிச்சி காவல் நிலையம்,
குற்ற எண்.84/2025,
பிரிவு 303(2) BNS, Sec.21(4) M &M (DR) Act ... எதிர்மனுதாரர்/3 ம் நபர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**உத்தரவு**

மனுதாரர் பிரிவுகள் 497, 503 BNS ன் கீழ் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுவின் சுருக்கம்** –

இவ்வழக்கானது எதிரி மீது ஆழ்வார்குறிச்சி போலிசாரால் ஜல்லி கற்கள் ஏற்றி வந்ததாக பிரிவு 303(2) BNS, Sec.21(4) M &M (DR) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மனுதாரருக்கு சொந்தமான TN 76 V 1936 எண் கொண்ட டிராக்டர் மற்றும் டிரைலரை ஆழ்வார்குறிச்சி போலிசார் கைப்பற்றி காவல்நிலைய பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும், மேற்படி டிராக்டர் மற்றும் டிரைலர் மனுதாரருக்கு சொந்தமானது என்றும், மேற்படி வாகனங்கள் ரூ.1,00,000/- விலை மதிப்புமிக்கது என்றும், மேற்படி வாகனங்கள் காவல்நிலைய பாதுகாப்பில் இருப்பதால் மழையும் வெயிலும் பட்டு அதன் பாகங்கள் கெட்டுப்போய் பின்னர் மனுதாரரால் உபயோகப்படுத்த முடியாமல் போய்

மனுதாரருக்கு தாங்க முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், மேற்படி டிராக்டர் மற்றும் டிரைலர் மனுதாரருக்கு அவசியமாக தேவைப்படுவதாகவும், மேற்படி வாகனங்கள் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் இருப்பதை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், இடைக்கால பாதுகாப்பு வகைக்கு மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளதாகவும், நீதிமன்றத்தின் சகல நிபந்தனைக்கும் கட்டுப்பட்டு நடக்க மனுதாரர் தயாராக உள்ளதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் தற்காலிகமாக ஒப்படைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம் </u>–**

மேற்படி வாகனத்தை மனுதார் வசம் ஒப்படைத்தால் மீண்டும் எதிரியிடம் கொடுத்து மீண்டும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடக்கூடும் என்றும், வாகனத்தை உருக்குலைக்க செய்து விற்பனை செய்யக்கூடும் என்றும், வழக்கு விசாரணையின் போது வாகனத்தை ஆஜர் செய்ய மாட்டார் என்றும், எனவே, வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. தீர்வு</u> –**

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பதும் தெரிய வரும் நிலையிலும், மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தின் ஆர்.சி புத்தகத்தின் நகலை தாக்கல் செய்துள்ள நிலையிலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேற்படி வழக்கு சொத்து பி.ஆர்.எண்.325/2026 என கொடுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்காவிட்டால் அதன் உதிரி பாகங்கள் சேதமடைந்துவிடும் என்பதை கருத்தில் கொண்டும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.325/2026 ல் தாக்கலான வழக்கு சொத்தான வரிசை எண்.1)TN 76 V 1936 என்ற பதிவெண் கொண்ட Swaraj Tractor மற்றும் அதனுடன் இணைந்த பதிவு எண் இல்லாத டிரைலர் வாகனம் மனுதாரருக்கு

கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u> :-

1. மனுதாரர் ரூ.7,00,000/-க்கு சொந்த பிணைப் பத்திரம் எழுதித் தர வேண்டும். மேலும், தனி இரு நபர்கள் தலா ரூ.7,00,000/-த்திற்கு பிணைப் பத்திரம் எழுதித் தரவேண்டும்.

2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.

4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.

5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

6. மேலும், அரசால் மேற்படி வழக்கு சொத்து குறித்து Confiscation நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

7. மேலும், நீதிமன்றத்தால் வேண்டப்படும் போது வழக்கு சொத்தை திரும்ப நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

8. ஆர்.சி புத்தகத்தின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் ஆகஸ்ட் திங்கள் 3ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.03 14:27:17 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.